https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஈரம் கசிந்த நிலம் நாவலில் விளிம்பு நிலை மக்களின் அவலநிலை

**ரா. சக்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழாய்வுத்துறை
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
மல்லுப்பட்டி, பாலக்கோடு – 635805

**முனைவர் த. மு. ஆனந்த்**
உதவிப் பேராசிரியர்

**ஆய்வுச்சுருக்கம்**

*விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கு ஏற்படும் ஆற்றா துயரங்களினால் அவர்கள் படும்பாடு என்பது சொல்லில் அடங்காதது. தங்கள் வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகள் அனைத்தும் நிரந்தரமற்றவைகளாகவே இருந்து வருவதை எண்ணி அவர்கள் வருந்துகின்றனர் என்பதை அறியமுடிகிறது. மாதாரிள் என்போர் பண்ணையார்களிடம் அடிமைகளாக இருப்பதாலும், குறைந்த கூலி பெறுவதாலும் அவர்களால் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண முடிவதில்லை என்பதை அறியமுடிகிறது. அதோடு, பெண்களும், கூலித் தொழிலாளர்களும் தங்களின் உரிமைகளுக்காக போராடும் அவலநிலையே இச்சமூகத்தில் நிலவுவதை நம்மால் கண்கூடாக காணமுடிகிறது. இதையே, இன்றைய நவீன எழுத்தாளர்கள் முன்வைத்து வருகின்றனர். சி.ஆர்.ரவீந்திரன் அவர்களும் கூலித் தொழிலாளர்களின் அவலநிலையை தன்னுடைய படைப்புகளின் வழி எடுத்துக்காட்டியுள்ளார்.*

**திறவுச் சொற்கள்**

*விளிம்புநிலை, மாதாரிகள், கூலி, பண்ணையார்கள், குத்தகை, அவலநிலை, சாதி, வர்க்கம், அதிகாரம்.*

**முன்னுரை**

*விளிம்பு நிலை என்ற சொல் நவீன இலக்கிய வட்டாரத்தில் இன்றைய காலத்தில் அதிகமாகப் பேசப்பட்டு வருவதை அறியலாம். இந்த விளிம்பு நிலை என்ற சொல் இத்தாலிய நாட்டு மார்க்சிய சிந்தனையாளரான அந்தோணியார் இராம்ஷி ( 1891—1937) முசோலினியின் ஆட்சியில் சிறைப்பட்டிருந்த காலத்தில் தான் எழுதிய சிறை குறிப்பில்" சபால்டான் என்ற சொல்லை அதிகாரம் இழந்த குழுக்கள் (அல்லது) வர்க்கங்களை குறிக்கப் பயன்படுத்தினர். அதிலும் குறிப்பாகத் தென் இத்தாலியைச் சார்ந்த அமைப்புசாரா கிராம விவசாயிகளைக் குறிக்க இச்சொல்லை இராம்ஷி பயன்படுத்தினார். இந்த விளிம்பு நிலை மக்கள் சமுதாயத்தில் அனைத்து வகையிலும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களாக கருதப்படுகின்றனர். அதோடு, பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களாகவும், தங்களுடைய அடிப்படை உரிமைகளை இழந்து ஒதுக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்து*

வருகின்றனர். இவர்கள் பிறப்பாலும் இனத்தாலும் பாகுபடுத்தி இந்த சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

இன்றைய சமுதாயத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது. அதனால் தங்களிடம் வேலை செய்பவர்களை பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கி வருகின்றனர் என்பதை சி.ஆர்.ரவீந்திரன் அவர்கள் ஈரம் கசிந்த நிலம் நாவலில் வலிமையாக வெளிப்படுத்தி உள்ளமையை அறியலாம்.

## மாதாரிகளின் அவல நிலை

வெயில், மழை என்று எதையும் பொருட் படுத்தாமல் நாள் முழுவதும் வயலில் வேலை செய்தாலும் அவர்களின் அடிப் படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும் கொங்கு வட்டார பகுதியில் வசிக்கும் மக்களை மாதாரிகள் என்கின்றனர். இவர்கள் தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை பண்ணையார்களின் நிலத்திலே செலவழிக் கின்றனர்.

இவ்வாறு வாழும் ஏழை மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். ஆனால் சிலர் மட்டும் நில உடைமை கொண்ட வராகவும் பண பலம் படைத்தவராகவும் திகழ்கின்றனர். உழைப்பை மட்டுமே சுரண்டி வாழும் தொழிலாளர் முதலாளிகளிடம் தொழிலாளர்கள் தாழ்ந்து பணிந்து வாழும் நிலையில் உள்ளனர் என்பதையும், அவர்கள் தொடர்ந்து தங்களின் எதிர்ப்பையும் காட்டி வருகின்றனர்ர் என்பதையும்,

**ஓடப்பராயிக்கும் ஏழையப்பர்**

**உதயப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்**

**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**

**ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ**

*(பாரதிதாசன் – பா.12)*

என்ற பாரதிதாசனின் வரிகள் உணர்த்து கி ன்றன. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். ஆண்டான்-அடிமைச் சிந்தனை மாற வேண்டும். ஏழைப் பணக்காரன் என்ற நிலையானது மாற்றம் பெற வேண்டும் என்பது இப்பாடலின் மையக்கருத்தாகும்.

முதலாளிகள் ஏழைத் தொழிலாளர்களை அடிமைகளாக வைத்திருப்பதால் ஏழை மக்கள் எல்லா காலத்திலும் பொருளாதா ரத்தில் பின் தங்கியவர்களாக இருந்து வருகின்றனர். இவற்றை,

**நுண்வினைகொள்ள நூற்றுவர் பின்வர**

**மெய்ப்பை புக்கு விலங்கு நடைச் செலவின்**

*(சிலம்பு. பா.106-7)*

என்னும் வரிகளால் அறிய முடிகிறது. இதில் விலங்கு நடை என்பது வீதியின் ஓரம் கொல்லன் நடந்து சென்றான் என்று பொருள் தரும். அதாவது உயர் வகுப்பைச் சார்ந்தவர்கள் வீதியில் வரும்போது கீழ் வகுப்பைச் சார்ந்த கொல்லன் வீதியில் அவர்களுக்கு வழிவிட்டு ஓரமாக நடந்து சென்றான் என்பதை விளக்குகிறது.

இதைப் போன்று நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் ஏழை தொழிலா ளர் கண்ணையன் குத்தகைப் பணம் தர தாமதமானதால் நிலத்தின் உரிமையாளர் நடராச கவுண்டர் ஆட்களைக் கூட்டிச் சென்று பருத்தி எடுத்து இருப்பதை பார்த்து அவனுக்கு அடி வயிறு கலங்கியது. கோபம் குபீரென்றுக் கிளம்பியது.

“அடுத்து வந்ததுடா வம்பு என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்து இடத்தில் இருந்து எழுந்து துண்டை உதறினான். அருணப்ப கவுண்டர் கண்ணையன் கூலி கொடுக்க பணம் தேடிக் கொண்டிருந்து விட்டான். பருத்திக்காட்டில் பெண்கள் இறங்கி இருந்தார்கள் அவர்களின் முந்தானைகளில் ஒரு கூடை அளவுக்கு பருத்தி முடித்து வைத்திருந்தனர். கண்ணையனுக்கு நெஞ்சு பதறியது. கண்ணையனிடம் போதிய பணம் இருந்திருந்தால் போன வாரமே பருத்தி எடுத்து இருப்பான். அவனுக்கு முன் நடராச கவுண்டர் முந்தி கொண்டார். அதற்கு மாரப்ப கவுண்டர் கண்ணயன் கஷ்டத்தைப் பாத்துட்டுதா இருக்கறாம் நடராசு பாத்து எப்படியோ ஒரு தடவை மாப்புக் குடுத்தாப் பரவால்ல என்கிறார்.

உடனே நடராச கவுண்டர், **“போன வருசக் குத்தகையே ரண்டாயிரம் நிக்குது இந்த வருசக் குத்தகையும் பாக்கி சொல்லுவா கேட்டுக்க முடியுமா? என்று நிதானமாகவே கேட்டார்”.**

இக்காட்சியில் கண்ணையன் நடராசன் கேட்டவுடன், இப்படிச் சொன்னா

***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

*எப்பிடிங்க? பெண்டு புள்ள கழுத்துல கிடக்கிறதையெல்லாம் கழட்டி அடகு வெச்சிட்டே, வாயைக் கட்டி வவுத்தக்கட்டி பாடுபட்டு மூணு வருஷமா போடாத மூட்டு வலி எல்லாம் போட்டாச்சு. இன்னும் ரண்டு வருஷங் குத்தகைக்குக் குடுத்தா பொழைச்சிப்பே, இல்லின்னா கிணறு குட்டை பார்க்க வேண்டிய தானுங்க என்று தன்னுடைய வறுமை நிலையைக் காட்டுகிறார். இவ்வாறு உழைக்கும் மாதாரியின் குரலைப் பதிவு செய்கிறார்.*

## பெண்களின் அவல நிலை

*பெண் என்பவள் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவள் என்றும், அவள் முற்றிலும் ஆணைச் சார்ந்து இயங்கும் இயல்புடைய வள் என்றும் சில ஆண் வர்க்கத்தினர் கூறி வருகின்றனர். இச்சமூகத்தில் ஒரு தலித் பெண்ணும் பிற சாதிப் பெண்ணும் ஒரு தரத்தில் வைக்கப்படுவதில்லை என்பது யதார்த்தம். பிற சாதிப் பெண்கள் ஆண்களால் மட்டுமே ஒடுக்கு முறைக்கு உள்ளாகிறாள். ஆனால் ஒரு தலித் பெண் ஆண் மட்டுமல்ல உயர் சாதிக்காரர்களாலும் ஒடுக்கப்படுகிறாள்.*

*"பெண்கள் நாட்டின் கண்கள்" என்று பாரதி யாரும், "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்தல் வேண்டும் அம்மா", என்று கவிமணி தேசிய விநாயகம் அவர்களும் பெண்களை உயர்த்திப் பாடியுள்ளனர். இருந்த போதும் பெண்களுக்கான உரிமைகள் சில மறுக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் தங்களுடைய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதை,*

**"நிமிர்ந்த நன்னடை மேற்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**

**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**

**செம்மை மாதர் திரும்புவதில்லையாம்".**

*(பாரதியார் பாடல்கள், பா.161)*

*என்று பாரதியாரும் தன் பாடலின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளார். பெண்கள் பல அறிவு பெற்று நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் பெற்று ஒழுகுவதால் அவர்கள் வாழ்க்கை சிறப்படையும் என்பதை நம்மால் உணர முடியும். இப்படிப்பட்ட காலத்தில் பெண்கள் காதல் செய்யக்கூடாது என்று கூறப்படுவது நியாயம் இல்லை. பெண்களுக்கு கல்வியும், காதல் உரிமையும் வேண்டும் என்று சமூக சீர்திருத்தவாதிகளும், பெண்ணியவாதிகளும் வலியுறுத்தி வருகின்றனர். பெண்கள், தான் விரும்பும் காதலை அடையவும் விரும்பியவர் களை கரம் பிடிக்கவும் முடியாமல் அவர்கள் அடையும் துன்பத்தை பற்றி அம்மணியின் கதாபாத்திரத்தின் மூலம் அறியலாம்.*

*"அம்மணி என்ற பெண் தன் காதலனுடன் இருப்பதை பார்த்த அவளுடைய அண்ணன் செங்கண்ணன் அவன் யார்? என்று கேட்டு சாட்டையால் அடித்து உதைத்தான். ஆனால் அம்மணி தன் காதலன் யார் என்று கூறாமல் அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு அழுது கொண்டு ஆசாரம் எல்லாம் புரண்டாள். பின் செங்கண்ணன் அடிப்பதை விட்டுவிட்டு இப்பொழுதாவது யார்? என்று சொல் என்றான் செங் கண்ணன். ஆனால் அவள் நான் எப்பவுஞ் சொல்ல மாட்டேன் என்றாள். இதைக் கேட்ட அவன்* **"இரு வர்றேன்! ஒரே வெட்ட வெட்டி கண்ட துண்டாக்கி போடுறேன்" என்று சொல்லிக் கொண்டே தெற்குப் பக்கமாக இருந்த கதவைத் திறந்தான். அடுத்து, காளி கோயில் கிணற்றுப் பக்கமாக அம்மணி பரக்கப் பரக்க ஓடினாள். செங்கண்ணனுக்கு குபீரென்றது.** *அந்த காளி கோயில் கிணற்றில் அம்மணி விழுகிற சத்தம் குபீரென்றுக் கேட்டது.அவள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள்.*

*இவ்வாறு தான் விரும்பியவர்களை கரம் பிடிக்க முடியாமல் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் அவல நிலை இந்த சமுதாயத்தில் துடைக்க முடியாத கண்ணீராகவே இருந்து வருகின்றது. அதுவும், மாதாரிகள் என்று சொல்லப்படுகின்ற தாழ்த்தப்பட்ட ஏழை மக்களிடையே பெண்கள் தாங்கள் விரும்பியதை அடைய முடியாத நிலையில் உள்ளனர் என்பதை அம்மணி கதாபாத்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அது மட்டுமல்லாது, பெண்கள் தான் விரும்பியவர்களை அனைவ ரின் எதிர்ப்பையும் மீறி கைப்பிடித்தால், அவளுக்கு யாருடைய உறவும் கிடைப்ப தில்லை. சொந்த பந்தங்களை எல்லாம் விட்டு விட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் படுகிறாள் என்பதை ராசாத்தி, முத்தையன்*

கதை கதாபாத்திரத்தின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"மரமேறி முனியமூப்பன் மகன் முத்தையன். இவர்கள் உழைக்கும் ஏழை குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தங்கப்ப கவுண்டர் மகள் ராசாத்தி. இவர்கள் உயர்வான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் காதலை யாரும் அறியாமல் இருந்த நிலையில், ஒரு நாள் இரவோடு இரவாக ஓடிப் போவார்கள் என்று யாரும் கனவில் கூட நினைக்க வில்லை".

**"ராசாத்தி ஓடிப்போன விஷயம் முனிய மூப்பனுக்கோ, அவருடைய பெண் சாதிக்கோ தெரியாது. முத்தையனின் பெற்றோர் களை காளி கோவில் மைதானத்தில் கட்டி வைத்து அடித்து உதைத்து கேட்டுப் பார்த்தனர். ஆனால், அவர்களுக்கு நடந்தவை ஏதும் தெரியாது. அவர்களையும் ஏமாற்றிவிட்டு ஓடிப் போயிருந்தார்கள். தங்கப்ப கவுண்டருக்கு அது தலைகுனிவாகிவிட்டது. அப்போது தலைகுனிந்தவர் தான் அதற்கான பட்டப் பெயரை சம்பாதித்து விட்டார்."**

இதன் மூலம் பெண் தனக்கு விருப்பமான வாழ்வை வாழ முடியவில்லை. அது மட்டுமல்லாமல், காதலில் பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது பெரும் தடையாக உள்ளது என்பதும், அதையும் மீறி காதலிப் பவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகப் படுவார்கள், என்பதோடு அவர்கள் மட்டுமல்ல அவர்களைச் சார்ந்த குடும்பமும் அவமானப்பட வேண்டும் என்பதே ராசாத்தி முத்தையன் காதலின் மூலம் அறியமுடிகிறது.

## கூலி தொழிலாளர்களின் அவல நிலை

கூலி தொழிலாளர்களின் வாழ்க்கை பல போராட்டங்களையும் சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். இவர்கள் தங்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பல போரா ட்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**கந்தைய அணிந்தோம் -இரு**

**கையே விரித்தெங்கள் மெய்யினைப்**
**போர்த்தோம்**

**முந்தையிற் கூழைப் பலர்**

**மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்**
*(பாரதிதாசன் பாடல்கள். பா.33)*

என்று தொழிலாளர் நிலையை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

ஏழை உழைப்பாளர்கள் பண்ணையார்களி டம் அடிமைகளாக்கப்பட்டு தன் வாழ் நாளினை போராடிக் கழித்து வருகின்றனர். இவர்களை பண்ணையார்கள் தொடர்ந்து அடிமைகளாக நடத்துகின்றனர். பண்ணை யாளர்களுக்கு உழைக்கும் உழைக்கும் தொழிலாளர்கள் பற்றிய கவலை இல்லை. அவர்களுக்கு பண்ணையில் வேலை நட நடக்க வேண்டும் என்பது தான் குறிக்கோள். உழைப்பாளர்களுக்கு எந்த விபத்து நடந்தாலும் கவலை இல்லை என்பதை இந்நாவலில் காட்சிப்படுத்தியுள்ளார். கண்ணப்பன் கிணற்றில் வெடித்த கற்களை எடுக்கச் சென்ற நிலையில் கிணற்றுக்கு வைத்த வெடி ஒன்று வெடிக்காமல் இருக்க, வேலன் கல் எடுக்கப் போகும் போது வெடித்ததில் கண்ணப்பனின் கையில் பலமாக அடிபட்டது. ஆனால், அதை கவுண்டர் பெரியதாக எடுத்துக் கொள்ள வில்லை. இதனை,

**"நேத்திக்கு வெடி வெடிச்சதுல ஒரு குழி வெடிக்காமப் போச்சாட்ட இருக்குது. கெணறு வெடி எறங்கின கண்ணிப்ப கையிலிருந்ததெத் தொப்புனு போட்டுருக்கிறா. வெடிச்சுப் போச்சு உசுருக்கு ஒண்ணுமில்லே கைதா. நாறு நாறப் பிஞ்சு போச்சு. நாத்தா எறங்கித் தூக்கி வந்தன்"** வந்து சேர்ந்த துரை ஊர் கவுண்டரிடம் சொன்னான்.

கண்ணப்பன் கிணற்றில் அடிப்பட்டதை அறிந்த அவன் மனைவி தலையில் வேகமாக அடித்துக் கொண்டு வந்தாள். அவளைப் பார்க்க வருத்தமாயிருந்தது. பெரியசாமி கவுண்டர் அவரே தேறுதலாக சொல்லத் தொடங்கினார். அவர் "இதா புள்ளே உன் புருஷனுக்கு ஒண்ணுமில்லே! கையிலதா அடி பலமாப் பட்டு போச்சு. வலிச் சோக்கையாப் படுத்திருக்கிறான். வெடிக்காரங்கிட்டச் சொல்லி ஆயிரமாரண் டாயிரமா கையில குடுக்கச் சொல்லுற, ஒன்ர புருஷன் சோவமாகி வார வரைக்கும் சோத்துக்குத் தண்ணிக்குக் குடுக்க சொல்றே. வெடிக்காரனும் கெட்டு முறிஞ்சு போய்க் கிடக்கிறான் அவஞ் சொல்றா, இவன் சொல்றான்னு கேட்டுட்டு அலையாதே! என்று பண்ணையார் ஏழை உழைப்பாளி கண்ணப்பனின் மனைவிக்கு அறிவுரை கூறுவதன் மூலம் அறியலாம்.

பணம் இருந்தால் எந்த குற்றமானாலும் சரி செய்து விடலாம் என்பதை பண்ணையாரின் அதிகார முறையினால் அறிந்து கொள்ளலாம். மாதாரிகள் தங்களுக்கு எந்த அளவுக்கு பிரச்சனைகள் வந்தாலும் அதனைப் பெரி தாகப் பொருட்படுத்தாமல் பண்ணையார் களின் பேச்சைக் கேட்டு மட்டுமே நடக்க வேண்டிய அவல நிலை உள்ளது என்பதை ஆசிரியர் இந்நாவல் மூலம் எடுத்துக் காட்டுகிறார். அதோடு, மாதாரிகளை என்ன செய்தாலும் கேட்க யாருமே இல்லை என்பதால் அவர்களின் வாழ்க்கை ஒரு பண்ணையார்களின் கையிலும் முதலாளி களின் கையிலுமே அடங்கியுள்ளது. இதே போன்று மற்றொரு காட்சியிலும் கூலித் தொழிலாளர்களின் குத்தகை பணப் பிரச்சனையில் முத்தைய கவுண்டரையும் அவரின் இரு மகன்களையும் வெடி கார வேலன் மகன் மாணிக்கம் சுட்டதால் ஏற்பட்ட பிரச்சனைகள் பற்றி,

**“கவுண்டரய்யா வுட்டல்ல வெச்சக் கோழிக்கறி தின்னுட்டு இருந்தானே மவராசெ? வந்து சுட்டு போட்டானே வெடிக்காம் பைய !”**

**“பெரியவனா, சின்னவனா? பெரியசாமிக் கவுண்டர் நிதானமாக கேட்டார். பெரிய பைய மாணிக்க! “ அவனா சுட்டான்?”**

**“ஆமாமய்யா! அந்தச் சண்டாளந்தான் என்ற வூட்டே ஒரு பாதகம் நடந்து போச்சே கவுண்டரய்யா!** என்று மாதாரிகளுக்கும் பண்ணையார்களுக்கும் நடக்கும் பிரச்சினை களை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

தினமும் உழைத்தால்தான் அன்று வயிற்றை நிரப்ப முடியும் என்று வாழும் ஏழைத் தொழிலாளர்கள் தங்களுடைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திச் செய்து கொள்வதில் மட்டுமல்லாது, தங்கள் உயிருக்கும் எந்த விதத்திலும் பாதகம் ஏற்படாத வண்ணம் வாழ வேண்டும் என்று எண்ணத்தோடு வாழ்க்கையை நகர்த்தி செல்கின்றனர். இந்த வகையிலான அவல நிலை ஏழைத் தொழிலாளர்களின் வாழ்வில் இன்னும் விடியாத ஒன்றாக இருந்து வருகிறது என்பதை இந்நாவல் வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

இந்த சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ள ஏழைத்தொழிலாளர்கள் நிரந்தரமற்ற வாழ்க்கையை வாழ்கின்றனர். முதலாளி வர்க்கத்தினரின் அதிகாரப் போக்கினால் காலம் காலமாக ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறை தாழ்த்தப்பட்ட நிலை யிலும் போராட்ட நிலையிலும் இருந்து வருகிறது எனலாம். சி. ஆர். ரவீந்திரன் அவர்கள் தன்னுடைய படைப்புகளில் ஏழை தொழிலாளர்களாக உள்ள விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றியும் அவர்களின் பல்வேறு சிக்கல்களையும், அவர்களின் அவல நிலையையும் கண்கூடாக காட்சிப்படுத்தியதை அறிய முடிகிறது.

## துணைநூற் பட்டியல்

1. ஈரம் கசிந்த நிலம், சி.ஆர். ரவீந்திரன், காலச்சுவடு பதிப்பகம், முதல் பதிப்பு, ப.2018, நாகர்கோவில், 629001.
2. பாரதிதாசன் கவிதைகள், அருணா வெளியீடு, வில்லிவாக்கம், சென்னை- 600049. முதல் பதிப்பு, டிசம்பர்-2008, 4ஆம் பதிப்பு, ஏப்ரல்-2016.
3. முனைவர் க.பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர் – 613001. முதல் பதிப்பு, நவம்பர்-20ll. 2ஆம் பதிப்பு-2016.
4. டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணை பதிப்பகம், மேற்கு அண்ணா நகர், சென்னை–613001. பதிப்பு, 2016.
5. சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 600014. முதல் பதிப்பு, 20ll. 7ஆம் பதிப்பு, 2017.
6. ஔவையார், நல்வழி, காலச்சுவடு பதிப்பகம், முதல் பதிப்பு, ப.2005, நகர் கோவில், 629001.